IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II SRIVILLIPUTTUR
CC. No.266/2019

**PW -1 Cross**

Name: **திரு. ஷேக் அலி**

S/o : **திவான் ஒலி**

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08th day of July 2025.

08.07.2025

1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.

நான் தேரடியில் சுமார் 8 வருடங்களாக ஹோட்டல் நடத்தி வருகிறேன். சம்பவம் நடப்பதற்கு முன்பு எனக்கு எதிரிகளை தெரியாது என்றால் சரிதான். எதிரிகளின் பெயர் மற்றும் விலாசம் போன்றவை போலீசார் சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். சம்பவம் நடந்த சமயம் ஹோட்டலில் சுமார் 20 முதல் 30 நபர்கள் சாப்பிட்டு கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறப்படும் சமயமானது சுமார் 1 மணி இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திலிருந்து நகர் காவல்நிலையத்திற்கு 10 நிமிடங்களில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். புகார் மனுவை போலீசார் சொல்ல சொல்ல எழுதப்பட்டது என்றால் சரிதான். மேற்படி 20, 30 நபர்கள் சாப்பிட்டுக்கொண்டிருந்த இடத்தில் யார் யாருடன் சண்டையிட்டனர் என்பது பற்றிய விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் போலீசாரிடம் கூறியது போல சொன்ன நாளில், சொன்ன விதத்தில், சொன்ன நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான்.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.